திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.ந.விஜயராஜ்,எம்.ஏ.,

ந.க.2759/2019/அ4 நாள்: 23.01.2023

பொருள் : பொதுப் பணியாளர் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆண்டுகளுக்கான தொகுதி – IV நேரடி நியமன இளநிலை உதவியாளர் - திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் - இளநிலை வருவாய் ஆய்வாளர் - பாரதி.(திரு)மு - சாதிச்சான்று மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்டது - தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் விண்ணப்பம் இறுதி செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

படிக்க:

1 செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,சென்னை-3 அவர்களின் கடித எண்.965/PSD-C3/2019 நாள்:15.02.2019.

2 திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.2759/2019/அ4, நாள்:04.03.2019.

3 மாநில கூர்நோக்கு குழு-I ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை செயல்முறை ஆணை எண் 12880/cv-5/2019-4 நாள்:02.12.2022

4 செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,சென்னை-3 அவர்களின் கடித எண்.965/PSD-C1/2019 நாள்:21.12.2022.

5 திருப்பூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கடித கா.மு.3/2019/க2 நாள்:03.01.2023 மற்றும் 11.01.2023.

* * * * * *

**ஆணை :-**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆகிய ஆண்டுகளுக்கான தொகுதி IV - தேர்வில் இளநிலை வருவாய் ஆய்வாளராகத்தேர்வு செய்யப்பட்டு திருப்பூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யபட்டுள்ள திரு.மு.பாரதி என்பவர் பார்வை 2-ல் காண் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின்படி தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் II திருப்பூர் தனிவட்டாட்சியர் (நி.எ) அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டதன்படி 11.03.2019 முற்பகல் பணியில் இணைந்து, தற்போது மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலகத்தில் கடந்த 31.08.2019 முதல் பணிபுரிந்து வருகிறார்.

2) இந்நேர்வில் தனியரது சாதி மெய்த்தன்மை குறித்த அறிக்கை பெற்றபின் தனியரது பணிவரன்முறை செய்திட தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவிக்கப்பட்டதன்படி, சென்னை ஆதிதிராவிடர் நலத்துறையில் தனியரின் சாதிச்சான்று மெய்த்தன்மை அறிக்கை கோரப்பட்டதில், பார்வை 3-ல் காண் செயல்முறைகளின்படி தனியரின்சாதி மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்டு பார்வை 4-ல் காண் தமிழ்நாடு அரசு

பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடிதத்தின்படி தனியரது விண்ணப்பம் இறுதி செய்யப்பட்டு பணிவரன்முறை செய்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) பார்வை 5-ல் காண் அறிக்கையின்படி மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில், இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.மு.பாரதி என்பவரது பணியினை 11.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து வழங்கக்கோரி முன்மொழிவு வரப்பெற்றுள்ளது. தனியர் மீது குற்றச்சாட்டுகளோ / ஒழுங்கு நடவடிக்கைகளோ நாளது தேதி வரை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

4) எனவே திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.மு.பாரதி என்பவரது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 11.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/-ந.விஜயராஜ்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முகஉதவியாளர் (பொது).
திருப்பூர்.

**பெறுநர் :**
திரு.மு.பாரதி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலகம்,
**திருப்பூர்.**

**நகல் :**
1) மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், திருப்பூர்.
2) "அ4" இருக்கைக்கு,
3) இருப்பு கோப்பிற்கு.

**// உண்மை நகல் // உத்திரவுப்படி //**

அலுவலக மேலாளர் (பொது)

27/1/23